# வாழ்வும் பணியும் வரலாற்று நிகழ்வுகளும்:

## யாழ். தீவகப் பிரதேசத்தில் 1847 - 1975 வரை பணியாற்றிய சில அமலமரித்தியாகிகள்

**திரு. அன்ரனி பெர்னான்டோ ஜெனிஃபர்**
LLB honours (*சிறப்புச்சட்ட இளமாணி*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)*

**முன்னுரை**

கடலோடு மணல் செறிந்து கொழுத்தும் வெயிலுடன் யாழ்ப்பாணக் குடாநாட்டுடன் தரைவழியான தொடர்புகள் ஏதுமற்றிருந்த காலகட்டத்தில் இறைவனின் மந்தைகளாக தீவகமண்ணில் வாழ்ந்த மக்களைத் தேடிவந்து தமது அரும் பணியை ஆற்றி இம்மண்ணையும் மக்களையும் மேம்படுத்திட தம்மை முழுமையாக அர்ப்பணித்த அமலமரித் தியாகிகள் சபைக்குருக்கள் சிலரையும் அவர்தம் பணிவாழ்வையும் சுருக்கமாகத் தருகிறது இக்கட்டுரை.

**ஆயர் யோண் ஸ்ரீபன் செமேரியாவும் இலங்கையில் முதலாவது ஞானவொடுக்கமும்**

இலங்கைக்கான முதலாவது அப்போஸ்தலிக்க பரிபாலகரான பேரருட்தந்தை பெற்றாக்கினி அவர்கள் இலங்கையில் பணியாற்ற குருக்கள் பற்றாக்குறையான காலத்தில் மேற்கொண்ட வேண்டுகோளின் பேரில் அமலமரித்தியாகிகள் சபையின் நான்கு பேர் கொண்ட முதல் மறைத்தூதுக் குழுவினர் தமது 37நாட்கள் பிரயாணத்தின் பின் 28.11.1847இல் யாழ்ப்பாணத்தில் கால்பதித்தனர். இக்குழுவில் அருட்பணி யோண் ஸ்ரீபன் செமேரியா(பின்னர் யாழ்ப்பாண ஆயரானவர்) அருட்பணி யோசப் அலெக்சாண்டர் சியாமின், லூயிஸ் ஹீற்றிங் அருட்சகோதரர் கஸ்பார் டி ஸ்ரெபானிஸ் ஆகியோர் உள்ளடங்குவர்.

யாழ்ப்பாண விக்காரியேற்றின் (அப்போஸ்தலிக்க திருத்தூது மாநிலத்தின்) முதலாவது அப்போஸ்தலிக்கப்

பரிபாலகரான ஆயர் பெற்றாக்கினி அவர்கள் காலமாக அவருடைய பொறுப்புக்களை ஆயர் பேரருட்தந்தை யோண் ஸ்ரீபன் செமேரியா அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். இவர் ஒலிம்பியா ஆயராகவும் யாழ்ப்பாண அப்போஸ்தலிக்க மாநிலத்தின் பரிபாலகராகவும் 06.06.1856இல் தெரிவு செய்யப்பட்டு 02.08.1856இல் அருட்பொழிவு செய்யப் பட்டார். ஆயர் பெற்றாக்கினி அவர்களின் மறைவின் பின்னர் 26.07.1857இல் தனது புதிய மறைத்தளத்தை ஆயராக பொறுப்பேற்றுக்கொண்டார். தனது மறைத்தளம் இறைநம்பிக்கைக் குறைவுடனும் ஆன்மீக நாட்டமின்றியும் இருப்பதை கண்ணுற்ற அவர் இவற்றைச் சீரமைத்திட மனத்தில் எண்ணங்கொண்டார்[1].

“நோயற்றவருக்கல்ல நோயுற்றவருக்கே மருத்துவர் தேவை” என்ற இறைமகன் இயேசுவின் வார்த்தைக்கமைய கத்தோலிக்கரிடையே பிரிவினை கொண்டு இருகுழுக்களாகப் பிரிந்திருந்த ஊர்காவற்றுறையிலிருந்து மாற்றத்தை உருவாக்கிட வேண்டுமென்று அவர் விரும்பினார். இவர்களில் ஒருசாரார் தனியாக தமக்கென ஒரு ஆலயத்தை அமைக்கும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். இம்முயற்சிகள் பிரிவினைக்கு வழிவகுக்குமென ஆயரவர்கள் அஞ்சினார். எனவே தன்னுடன் உடனிருந்த இரண்டு அருட்பணியாளர்களான அருட்பணி பொஞ்சீன் (பின்னாட்களில் யாழ்ப்பாண ஆயராக பணியாற்றியவர்) (அமதி), அருட்பணி சௌனவல் (அமதி) ஆகியோருடன் தன்னையும் இணைத்துக்கொண்டு ஊர்காவற்றுறைப் பங்கிலே மகாஞானவொடுக்கமொன்றை நடத்திடத் திட்டமிட்டார். மறைமாவட்டம் அப்போதிருந்த நிலையில் மகாஞானவொடுக்கம் மூலம் இறைவார்த்தையை மக்களுக்கு அறிவிக்கும் பணியானது இனிமைமிக்கதாக அமையுமென அவர் எண்ணவில்லை. மாறாக கண்ணீர்நிறைந்த துயரமிக்க பாதையூடாக தம்மை வருத்தியே அதனை அடையலாம் என்று எண்ணி வியாகுல அன்னை திருநாளான

செப்ரெம்பர் 15ஆம் நாளில் மகாஞானவொடுக்கத்தை ஆரம்பிக்கத் திட்டமிட்டார். எனினும் தவிர்க்க முடியாத தாமதங்களால் குருக்கள் செப்டம்பர் 18ஆம் நாளன்று மாலையிலேயே ஊர்காவற்றுறையை வந்தடைந்தனர்[2].

மகாஞானவொடுக்கக் காலத்தில் ஊர்காவற்றுறைப் பங்குத்தந்தையாக அருட்பணி யோண் லீ பெஸ்கோ (அமதி) அடிகளார் அவர்கள் விளங்கினார். அவர் ஆயரவர்களையும் ஏனைய இரு குருக்களையும் வரவேற்றார். மகாஞானவொடுக்க நிகழ்வுகளில் மக்கள் பெரிதாக ஆர்வம் காட்டாத நிலையிலும் குருக்கள் மனந்தளராதோராய் தமது மறைபோதகப்பணியை இல்லங்கள்தோறும் சென்று மிக்க பிரயத்தனத்துடன் ஆற்றினார்கள். ஆலயத்திலும் பொதுஇடங்களிலும் மறை போதகங்களையும் தர்க்கப்பிரசங்கங்களையும் ஊக்கமுடன் ஆற்றினார்கள். மக்களுக்கு நீதிவழங்கும் அமர்வுகளும் இடம்பெற்றன. இவற்றில் மக்கள் தமது குடும்பப்பிணக்குகள், கொடுக்கல்வாங்கல்கள், காணிப்பிணக்குகள் போன்றவற்றை யும் முன்வைத்தனர். இம்மகாஞானவொடுக்கம் ஒக்டோபர் 22ஆம் நாள் நிறைவுறுவதாக அறிவிக்கப்பட்டாலும் 8நாட்கள் தாமதமாகவே நிறைவுற்றது[3].

இலங்கையில் முதலாவது மகாஞானவொடுக்கத்தின் நினைவுகளைத் தாங்கி ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலய வளாகத்தில் மரத்தாலான திருச்சிலுவை அமைக்கப் பட்டது. காலகதியில் இச்சிலுவை சிதைவுறவே 1908ஆம் ஆண்டில் முதல் மகாஞானவொடுக்கத்தின் பொன் விழாவை பேரருட்தந்தை ஹென்றி யூலன் ஆண்டகையவர்கள் நினைவுகூர்ந்து திருப்பலி ஒப்புக்கொடுத்து அதே இடத்தில் பித்தளைத் தகடு போர்த்த திருச்சிலுவை மரத்தை நாட்டினார். இச்சிலுவைமரத்தை இவ்வாலயத்தைச்சேர்ந்தசவிரிமுத்துஎன்ற பங்குமகன் அன்பளிப்பாக வழங்கினார். இச்சிலுவைமரத்தை இன்றும் இவ்வாலய வளாகத்தில் கடற்கரையோரமாகக்

காணலாம். காலங்கள் கடந்த போதும் ஓர் இறைநம்பிக்கையின் வித்து விதைக்கப்பட்டதன் அடையாளமாக இந்தத் திருச் சிலுவை மரம் எம்மத்தியில் காட்சியளிக்கின்றது. முதல் மகாஞானவொடுக்கத்தின் விதைகள் விசுவாச விளைநிலத்தில் விழுந்து பலனளிக்கும் பெரும் விருட்சங்களாக வளர்ந்து பல்வேறு ஆயர்கள், அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், இம்மண்ணிலிருந்து உருவாகி உலகெங்கும் நற்செய்தியை அறிவிக்கும் நற்பணியை ஆற்றி வருகின்றனர்.

**அருட்பணி. ஜோசவ் மரிய லூயிஸ் போஸ்ஸோ, அமதி**

அருட்பணி ஜோசவ் மரிய லூயிஸ் போஸ்ஸோ (அமதி) அடிகளார் அவர்கள் இறைவன் மீது கொண்ட அன்பினாலும் ஆன்மாக்களை மீட்கும் ஆவலினாலும் அமல மரித்தியாகிகள் சபையில் இணைந்து கொண்டார். தனது இலங்கைக்கான பயணத்தை 07.09.1862இல் ஆரம்பித்து 02.11.1862இல் யாழ்ப்பாண நகரை வந்தடைந்தார்.

அடிகளார் அவர்கள் 1863இல் வலிகாமம் பணித்தளத்திற்கு அனுப்பப்பட்டார். அங்குதான் இவருடைய மறையறிவிப்புப் பணி ஆரம்பமானது. வலிகாமத்தில் பணி ஆற்றிய போது இளவாலை புனித அன்னம்மாள் ஆலய பங்கு மனையை அமைத்தார். அத்தோடு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்திலிருந்து தருவித்த மரத்தூண்களைக் கொண்டு மாரீசன் கூடல் புனித கயித்தார் ஆலயத்தின் நடுப்பகுதியை தாங்கும் தூண்களை அமைத்து ஆரம்ப கட்டுமானங்களை மேற்கொண்டார். 1867இல் யாழ்ப்பாணத்திற்கு அழைக்கப்பட்டு கொழும்பகம் ஆதரவற்றோர் இல்லத்திற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டார். இவருடைய தலைமையின் கீழ் முதற் கத்தோலிக்க அச்சகம் கொழும்பகத்தில் ஆரம்பிக்கப்பட்டது[4].

1871இல் ஊர்காவற்றுறைப் பங்குத்தந்தையாக பணிப்பொறுப்பேற்ற இவர் 1872இல் ஊர்காவற்றுறை புனித

அந்தோனியார் கல்லூரியை நிறுவினார். இன்று இக்கல்லூரி 150 ஆண்டுகளைக்கடந்துதீவகத்தில்அறிவொளிபரப்பும்கலங்கரை விளக்கமாக திகழ்கின்றதோடு பல்துறைசார் வல்லுநர்களையும் குருக்கள் துறவியர் ஆயர்களையும் உலகுக்கு வழங்கியுள்ளது. 1873இல் நாரந்தனையில் புனித சூசையப்பர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரர்களுக்கான இருப்பிடத்தை நிறுவி நாரந்தனை பாடசாலையின் கற்பித்தற்பணியை அவர்களிடம் ஒப்படைத்தார். அதே ஆண்டில் அல்லைப்பிட்டி புனித யுவானியார் ஆலய வளாகத்தில் ஒரு குருமனையையும் மண்டைதீவில் ஒரு குருமனையையும் அமைத்தார்[5]. அல்லைப்பிட்டி றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் இவருடைய பணிக்காலத்தில் 1873இல் அமைக்கப்பட்டது. அடிகளாரின் பணிக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை பல்லாண்டுகளாக அல்லைப்பிட்டி மக்களுக்கு நற்கல்வி புகட்டும் மையமாக விளங்கி வருகிறது.

1874இல் மாதோட்டப்பகுதிக்கு மாற்றலாகிச்சென்று 1877 வரை அப்பிரதேசத்தை பரிபாலித்தார். 1883 இல் ஆயர் பொஞ்சீன் அவர்கள் கொழும்பு அப்போஸ்தலிக்க விக்காரியேற் ஆக பொறுப்பேற்ற போது அடிகளாரையும் தன்னுடன் அவ்விடம் அழைத்துச்சென்றார். தனது வலக்கரமாக செயலாற்றிய அடிகளாரை கொழும்பு விக்காரியேற்றின் முதற் குருமுதல்வராக நியமனம் செய்தார். தனது பொறுப்புக்களை திறம்பட ஆற்றிவந்த அடிகளாரை தனக்கு பின்னர் ஆயராக நியமிக்கும் எண்ணத்தை ஆயர் பொஞ்சீன் கொண்டிருந்தார். ஆயினும் இறைதிட்டம் வேறாக இருந்தது. அடிகளார் அவர்கள் சுகவீனமுற்றவராய் 7.08.1886இல் இறையடி சேர்ந்தார். ஏராளமான இறைமக்களின் கண்ணீர் மழை நடுவே அடிகளாரின் உடல் கொட்டாஞ்சேனை பொதுச் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது[6].

**அருட்பணி. அகஸ்டஸ் ரவுட்செட், அமதி**

அருட்பணி அகஸ்டஸ் ரவுட்செட் (அமதி) அவர்கள் தனது முதற்பணியை இலங்கைக் கத்தோலிக்கருக்கு ஆற்றிட 04.08.1872 இல் தன் தாயகமாக பிரான்ஸ் தேசத்திலிருந்து புறப்படலானார். இலங்கையின் யாழ்ப்பாண மறைமாவட்டத்தை வந்தடைந்த அடிகளார் ஊர்காவற்றுறைப் பங்கை அப்போது பரிபாலித்து வந்த அருட்பணி ஜோசப் பொஸ்ஸோ அடிகளாருக்கு உதவிப்பங்குத் தந்தையாக பணிபுரிய 1873 ஆடி மாதம் அனுப்பி வைக்கப்பட்டார். அதன் தொடர்ச்சியாக 1874இல் முல்லைத்தீவிற்கு பணி இடமாற்றம் பெற்றுச்செல்லலானார். 1875 வைகாசி மாதத்தில் அருட்பணி செயின்ட் ஜீனஸ் (Rev Fr.Saint Genes) அடிகளார் யாழ் பேராலயத்திற்கு மாற்றலாகிச் செல்லவே அவர் விட்டுச்சென்ற இடத்தை ஈடுசெய்வதற்காக மன்னாருக்கு அனுப்பப்பட்டார்.

1875 –1878 வரையான காலத்தில் மன்னாரில் கொலரா நோய் மிகத்தீவிரமாகப் பரவி மக்களை வாட்டி வதைத்தது. இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கோப்பிச் செய்கைக்காக வரவழைக்கப்பட்ட கூலித்தொழிலாளர்கள் பலரும் இந் நோயால் பாதிக்கப்பட்டிருந்ததாலும் அவர்கள் மன்னார் வழியாக கண்டி மாநகருக்கு கொண்டு செல்லப்பட்டமையாலும் இந்நோய்க்கிருமிகள் மன்னார் மக்களை வலுவாகப்பற்றிக் கொண்டன. இதனால் ஒருவாரத்தில் தோராயமாக 500 பேருக்கு மேற்பட்டோர் நோய்த்தொற்றுக்கு இலக்காயினர். இதனால் மன்னார் நகரமே மிக பாரதூரமான அபாயத்திலிருந்தது.

அருட்பணி அகஸ்டஸ் ரவுட்செட் அடிகளாரும் அவரோடிணைந்த துறவறத்தார் அனைவரும் இவ்விடர் மிக்க காலத்தில் மக்களை அருகிருந்து பராமரித்தனர். 1886 –1888 வரை ஊர்காவற்றுறைப் பங்குத்தந்தையாக பணிபுரிந்த போது நெடுந்தீவில் தலைவிரித்தாடிய சாதிய அடக்குமுறைகளை கட்டுக்குள் கொண்டுவர அயராது உழைத்தார். தனது

வருடாந்த பணிக்கான பயணத்தில் நெடுந்தீவு மக்களுக்கு அருளடையாளங்களை வழங்கி இறைவழியில் மக்களை நெறிப்படுத்தினார். கடும் புயற்காற்றால் சேதமடைந்த ஆலயத்தின் கூரைகளையும் புனருத்தாரணம் செய்வித்தார். 1884இல் ஊர்காவற்றுறைப் பங்கின் ஓர் கிளைப்பங்காக விளங்கிய அல்லைப்பிட்டியில் மக்களின் ஆன்மீகத் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு புனித பிலிப்பு நேரியாரின் பெயரால் ஓர் ஆலயத்தை எழுப்பினார். இவ்வாலயத்தின் கட்டுமானப்பணிகள் யாவும் 1893இல் பூரணப்படுத்தப்பட்டன[7]. துன்புறும் மக்களின் தோழனாகவும் பரந்த மனத்தினராகவும் வாழ்ந்த அருட்பணி அகஸ்டஸ் ரவுட்செட் அடிகளார் 12.10.1899 பொரளையில் தனது பணிவாழ்வை நிரந்தரமாக நிறைவு செய்து இறைவனின் அடிகளில் சரண்புகுந்தார்[8].

**அருட்பணி. சேவியர் நீக்கிலஸ் சந்திரசேகர், அமதி**

அருட்பணி சேவியர் நீக்கிலஸ் சந்திரசேகர் (அமதி) அடிகளார் அவர்கள் புனித வளனார் துறவறசபையில் இணைந்து துறவியான பின்னர், குருவாகி பணிபுரிய விரும்பி அமலமரித் தியாகிகள் சபையில் இணைந்து குருவானார். இவர் அமலமரித்தியாகிகள் சபையைச்சேர்ந்த முதலாவது இலங்கைக் குருவானவர் என்பதோடு தனது குருத்துவ உருவாக்கத்தையும் குருப்பட்டத்தையும் யாழ்ப்பாணத்திலேயே பெற்றுக்கொண்ட குருவானவர் என்பதுவும் நோக்கத்தக்கது. தனது முதற்பணியை 1877 –1882 வரை ஊர்காவற்றுறைப்பங்கிலே ஆற்றிய பின்னர் வெவ்வேறு பணித்தளங்களில் பணிபுரியலானரார். மீளவும் 1893 –1902 வரை ஊர்காவற்றுறைப்பங்கைப் பொறுப்பேற்ற அடிகளார் அவர்களே சுருவில் றோமன் கத்தோலிக்கப் பாடசாலையை நிறுவியவராவார்.

சரவணை சின்னமடுவில் சிறுவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக 1894இல் ஒரு பாடசாலையை நிறுவியதோடு செபமாலை அன்னை ஆலயத்தையும் நிறுவினார்.

இவ்வாலயத்தை அமைக்க சின்னமடுப் பாடசாலையின் ஆசிரியரான மாதகல் பாவிலுப்பிள்ளை சட்டம்பியார் அவர்களும் சரவணைக் கட்டையர் எனப்படுபவரும் அடிகளாருடன் துணைநின்றனர். ஆலயக் கொட்டில் வேலைகள் நிறைவுற்றதும் அங்கு வைத்து வணங்கத்தக்க திருச்சொருபம் யாதொன்றும் இல்லாதிருப்பதைக் கண்ணுற்று ஊர்காவற்றுறை புனித யாகப்பர் ஆலய குருமனையில் இருந்த செபமாலை அன்னையின் திருச்சொருபத்தை எடுத்துவர எண்ணினார். அக்காலத்தில் ஊர்காவற்றுறையில் செல்வாக்குப் பெற்றிருந்த தொம்மைக்குட்டி என்பவரிடம் அண்ணாவியார் மனுவல் அவர்களையும் அழைத்துக்கொண்டு சென்ற அடிகளார் திருச்சொருபத்தை ஆலயத்திற்கு வழங்கும்படி கோரினார். உடனடியாக தொம்மைக்குட்டி யாகப்பர் ஆலய மூப்பர் யக்கோப்பிள்ளை அவர்களையும் அடப்பனார் வஸ்தியாம்பிள்ளை அவர்களையும் கண்டு அனைவரின் சம்மதத்தையும் பெற்று குருமனைக்குச் சென்றனர். அங்கு தூசுபடிந்த நிலையிலிருந்த சொருபத்தைத் துடைத்து அடிகளாரிடம் ஒப்படைக்க அடிகளார் அதனை சின்னமடு ஆலயத்தில் நிறுவினார்[9].

1898இல் நெடுந்தீவுபங்கைப் பொறுப்பேற்றுக் கொண்டார். இவரே நெடுந்தீவுப்பங்கின் முதலாவது பங்குத் தந்தை என்பது குறிப்பிடத்தக்கது. தனது ஆர்வத்தினால் பிறமறைகளிலிருந்து கத்தோலிக்க மறையைத் தழுவியவர்களுக்காக நெடுந்தீவில் புனித சவேரியாரின் நாமத்தால் ஓர் சிறிய அழகிய ஆலயத்தை 1878இல் அமைத்ததோடு ஆலயத்திற்கு மேற்காக பெரிய விட்டுவீதியான குருமனையை 1901–1903 காலப்பகுதியில் கட்டியெழுப்பினார்[10]. இவர் 1912இல் இறையடி ஏகினார்.

**அருட்பணி. எமில் வியார்ட், அமதி**

அருட்பணி எமில் வியார்ட் (அமதி) (Rev.Fr.Emile Viard OMI) அவர்கள் 20.10.1912இல் இலங்கை தேசம் வந்தடைந்தார். உதவிப் பங்குத்தந்தையாக ஊர்காவற்றுறை, இளவாலை, மன்னார் முதலிய பங்குகளில் பணியாற்றிய அடிகளார் முத்தரிப்புத்துறைப் பங்கை 1914இல் பொறுப்பேற்றார். தொடர்ந்து முல்லைத்தீவு (1917), பருத்தித்துறை (1918) முதலான பங்குகளில் பணிபுரிந்து 1924இல் பாசையூர்ப்பங்கை உள்ளடக்கிய வழிமீசாம் பங்குகளுக்கு பங்குத்தந்தையானார். இக்காலத்தில் வழிமீசாம் பங்குகளில் ஒன்றாக அல்லைப்பிட்டி விளங்கியது[11].

அல்லைப்பிட்டி புனித யுவானியார் ஆலய மூப்பராக விளங்கிய சுழியார் அவர்கள் பாலைதீவிலே ஓர் அந்தோனியார் ஆலயத்தை நிறுவியிருந்தார். அவ்வாலயம் அங்கு தொழில் புரியும் கடற்றொழிலாளர் வணக்கம் செலுத்தும் ஓரிடமாக அப்போது விளங்கியது. அங்கு அடிக்கடி உண்டியலில் இடப்படும் பணம் களவாடுவதைக் கண்டு அந்தோனியாரை நோக்கி உமக்கு இடப்படும் உண்டியல் பணத்தைக் காப்பாற்றத் தெரியவில்லை என்று ஏசிவிட்டு அச்சொரூபத்தை படகிலேற்றி அல்லைப்பிட்டி ஆலயத்தில் வைத்து விட்டார். சுழியார் அவர்களின் மைந்தரான மோசேஸ் அவர்கள் அருட்பணி எமில் வியார்ட் (அமதி) அவர்களுடைய தோழர். மீனவரான அவர் தன் தந்தையாரின் செய்கையை அடிகளாருக்கு உரைத்து அத்திருச்சொருபத்தை ஓர் ஆலயத்தைக் கட்டியெழுப்பி அங்கு வைத்து வழிபட விரும்பிய எண்ணத்தின் படி மோசஸ் அவர்கள் பல இடங்களுக்கும் தனது தள்ளாத வயதில் சென்று நிதிதிரட்டி ஆலயம் அமைத்து ஆலயத் திருவிழாவையும் கொண்டாடி மகிழ்ந்தார்.

"தாம் இருவரும் இக்கடலை ஆளும் ஓநாய்கள்" என்று தனக்கும் மோசஸ் அவர்களுக்குமாக நெருக்கத்தை

விளக்குகிறார். இவ்விடயங்களை ***'Petites Annales des Missionaries Oblats de Marie Immaculee'*** என்ற பிரான்சிய சஞ்சிகைக்கு எழுதிய "மோசேயும் புனித அந்தோனியாரும்" என்ற கட்டுரையில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். அண்ணளவாக பத்தாண்டுகள் வழிமீசாம் பங்குகளின் அன்புக்குரிய தந்தையாக அடிகளார் விளங்கினார்[12]. தான் பிரான்சிய சஞ்சிகைகளுக்கு எழுதிய கட்டுரைகள் மூலம் பெற்ற சிறிய வருமானத்தைச் சேகரித்து இரணைதீவில் அழகிய ஆலயத்தைக் கட்டுவிக்க முனைப்புடன் உழைத்தார். பருத்தித்துறை தும்பளையில் கெபிக் கட்டுமானப்பணிகளை ஆரம்பித்து வைத்தார். அடிகளார் அவர்களே மாதகல் பங்கில் பணியாற்றிய போது புனித லூர்து அன்னைக்கு ஓர் கெபியை அமைத்தார். இக்கெபியானது பிரான்ஸ் நாட்டின் லூர்து நகரிலுள்ள அன்னை காட்சியளித்த மசபியேல் குகையை ஒத்த தன்மையுடன் அடிகளாரால் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். அர்ப்பணிப்புடைய நற்குருவான இவர் 11.01.1945 இல் இறையடி சேர்ந்தார்.

**அருட்பணி. அலன் யாவிஸ் மரிய கறோவ், அமதி**

அருட்பணி அலன் யாவிஸ் மரிய கறோவ் (அமதி) அடிகளார் அவர்கள் 1951ஆம் ஆண்டு புதுவருடப்பிறப்பன்று இறைவனின் பணிபுரிய இலங்கை தேசம் வந்தடைந்தார். 12.01.1951 தனது பணியை யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் ஆற்றிடத் தொடங்கினார்[13]. முதன்முதலாக நாரந்தனைப்பங்கின் உதவிப்பங்குத்தந்தையாக பணி நியமனம் பெற்றார். ஆயினும் 19.11.1951இல் பேசாலைப்பங்கின் உதவிப்பங்குத்தந்தையாக நியமிக்கப்பட்டு மன்னாருக்கு அனுப்பப்பட்டார். 1952 மாசி மாதம் அடிகளார் தாழ்வுபாடு-பள்ளிமுனைப் பங்கின் உதவிப்பங்குத் தந்தையாக பணியமர்த்தப்பட்டார் எனினும் 1952.11.07 அன்று யாழ்ப்பாணத்திற்கு மீள அழைக்கப்பட்டு சுவாமி ஞானப்பிரகாசருக்கு உதவியாக நல்லூர் வழி மீசாமிற்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

வெண்ணிற சுருண்ட தலைமுடியுடன் அழகாகக் காட்சியளித்த அடிகளாரை மக்கள் தமது தந்தையாகவே பாவித்து எதுவித தயக்கமுமின்றி நல்லுறவு பாராட்டி வந்தனர். தளராத விசுவாசத்துடனும் ஓர் இயேசுவின் சீடனுக்குரிய துணிச்சலுடன் சவால்களை எதிர்கொண்டார். ஏழை மாணவர்களின் கல்வியில் அதிக சிரத்தை கொண்ட அடிகளார் இறப்பர் தோட்டத்தில் கல்வி பயில இயலா நிலையில் வாடும் பிள்ளைகளை முன்னேற்ற பாலர் பாடசாலைகளை அமைத்ததோடு நகரங்களிலிருந்து அருட்சகோதரிகளை ஓய்வு நாட்களில் வரவழைத்து கல்வி கற்பிக்கவும் வழிவகுத்தார். மேலும் ஏழை மாணவர்களுக்கு சத்துணவை தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் வழங்கினார்.

1955.01.22 அன்று புதுக்குடியிருப்புப் பங்கிற்கு பங்குத்தந்தையாக அனுப்பப்பட்ட அடிகளார் 1955.09.08 முதல் 1960இல் விடுமுறைக்காக தனது இல்லத்திற்கு செல்லும் வரை மண்டைதீவு அல்லைப்பிட்டி பங்குத்தந்தையாக பணிபுரிந்தார். இவர் பங்குத்தந்தையாக இருந்த போது அல்லைப்பிட்டி றோமன் கத்தோலிக்க தமிழக் கலவன் வித்தியாலய மாணவர்கள் குடிசைகளிலும் மரநிழல்களிலும் உரிய கட்டட வசதியின்றி அல்லற்படுவதைக் கண்ணோக்கி தனது பயணத்திற்காக வைத்திருந்த இலண்டன் உயர் தயாரிப்பான BSA உந்துருளியை விற்று அல்லைப்பிட்டி றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் மாணவர்கள் படிக்கவென கல்லாலமைந்த கட்டடமொன்றை அமைப்பித்து பாடசாலை மாணவர்கள் கற்பதற்கு வழிவகை செய்த தாராள மனத்தினர். விசக்கடியால் பாதிக்கப்பட்டு உயிருக்கு போராடிக்கொண்டிருந்த ஒருவருக்கு மந்திராச்சாரங்கள் செய்வதைக் கண்டித்துவிட்டு தனது வாயால் கடிவாயிலிருந்து இரத்தத்தை உறிஞ்சி புறத்தே உமிழ்ந்துவிட்டு சிகிச்சை செய்து மருந்திடும் மனத்தினராக இவர் விளங்கினார்[14].

மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயத்திற்கு மின்சாரத்தைப் பெறும் பொருட்டு ஒரு காற்றாடியை ஆலயத்திற்கு அருகாமையிலுள்ள பனைமரத்திற் பொருத்தி மின்னுற்பத்தி செய்து பயன்படுத்தினார்[15]. அல்லைப்பிட்டி புனித பிலிப்பு நேரியார் ஆலயத்திற்கு சொந்தமான தோட்ட நிலத்தில் பயிரிடுவதற்காக முதன்முதலில் கோவா விதைகளை தருவித்து வழங்கி புதிய முறையான பயிர்ச்செய்கையை ஊக்குவித்தார். இவ்வாறு விளைவித்தவற்றில் மூன்றில் ஒருபங்கினை பயிர்ச்செய்கை மேற்கொண்டோர் அடிகளாருக்கு நன்மனதுடன் வழங்கினர்[16].

திருவருட்சாதனங்களை பெற்றுக் கொள்பவர்கள் தம்மை ஆன்மீக ரீதியில் நன்முறையில் ஆயத்தப்படுத்த வேண்டுமென நல்லெண்ணங்கொண்ட தந்தையவர்கள் மிகவும் கடுமையான நடைமுறையை திருவருட்சாதன ஆயத்தங்களில் கடைப்பிடித்ததாகத் தோன்றுகிறது. சமூகநீதிக்காக குரல் கொடுக்கும் பண்போடு தமிழ்மக்களுடன் தன் வாழ்வை செலவளித்த தந்தையவர்கள் தமிழ் மொழியைப் பிழையறப் பேசிட வல்லவர் என்பது சிறப்பானது. அடிகளார் 12.08.2008 தனது 83ஆவது வயதில் பிலிப்பைன்ஸ் நாட்டில் இவ்வுலக வாழ்வை நீத்து விண்ணக வாழ்வை எய்தினார்[17].

**அருட்பணி. ஹென்றி மொறோ, அமதி**

அருட்பணி ஹென்றி மொறோ (அமதி) அடிகளார் அவர்கள் 15.04.1927இல் இலங்கைத்தீவில் கால்பதித்தார். அப்போதைய யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயரான பேரருட்தந்தை கியோமர் அவர்களால் மருதமடுப்பதியில் 26.06.1927இல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். இரணைதீவின் வேந்தராக அறியப்படும் அருட்பணி மொறோ அடிகளார் அங்கு வாழ்ந்த மக்களின் கல்வி, ஆன்மிக சமூக மேம்பாட்டுப்பணிகளில் ஈடுபட்டுழைத்தார். இவரே அத்தீவின் மக்களுக்கு இயந்திரப்படகு மூலம் மீன்

பிடிக்கும் நுட்பத்தைக் கற்பித்து மீனவர் நல்வாழ்க்கை வாழ வழிவகுத்தார். பிள்ளைகளுக்கு கற்பிக்கும் பணியையும் தாமே முன்னின்று மேற்கொண்டார். இரணைதீவிலுள்ள நீர்த்தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய மழைநீர் சேகரிப்புத் தாங்கிகளை அமைக்கலானார். 1971இல் ஊர்காவற்றுறைக்கு அண்மையாகவுள்ள எழுவைதீவுக்கு பணிக்காக அனுப்பப்பட்டார்[18]. இங்கமைந்துள்ள புனித தோமையார் ஆலயத்தையும் குருமனையையும் புனரமைக்கும் பணிகளில் ஈடுபட்ட அருட்தந்தை அவர்கள் ஆலயத்திற்கு மின்சார ஒளியூட்டிய பெருமையையும் பெறுகின்றார். அத்தோடு எழுவைதீவில் வசித்த முதற்குருவானவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அடிகளார் அவ்வப்போது ஊர்காவற்றுறை புனித யாகப்பர் ஆலய குருமனையில் வந்து தங்கிச்செல்வதை தனது வழக்கமான செயற்பாடுகளில் ஒன்றாக கொண்டிருந்தார். தனது வாழ்வாலும் பணியாலும் மக்களோடு மக்களாக வாழ்ந்த அடிகளார் 7.11.1986இல் இறைபதமேகினார்.

**சுருவில் அன்னை மரி மாதாவும் அமலமரித்தியாகிகளும்**

சுருவில் அன்னை மரி ஆலயத்திலுள்ள மரியன்னையின் பெரிய திருச்சொரூபம் தன்னகத்தே ஓர் அரிய சிறப்பையும் அமலமரித்தியாகிகளுடனான தொடர்பையும் உள்ளடக்கியுள்ளது. அமலமரித்தியாகிகள் சபையின் நிறுவுநரான புனித இயூயின் டி மசனட் அவர்கள் பிரான்ஸ் நாட்டின் ஐக்ஸ் (Aix) பிரதேசத்திலமைந்துள்ள அமலமரித்தியாகிகள் சபைக்கு சொந்தமான சிற்றாலயம் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த புகழ்பெற்ற சிற்பி ஒருவரால் அமைக்கப்பட்ட அன்னையின் இத்திருச்சொரூபத்தை இலங்கைக்கான முதல் அமலமரித்தியாகிகள் சபையின் குழுமத்திற்கு தலைமைதாங்கிய பேரருட்தந்தை செமேரியா (அமதி) அவர்களிடம் ஒப்படைத்திருந்தார்.

அவர் இச்சொரூபத்தை யாழ்ப்பாணத்திலுள்ள அமலமரித்தியாகிகள் சபையினரின் சிற்றாலயத்தில் நிறுவி வணக்கம் செலுத்தி வந்தார். ஆண்டுகள் உருண்டோடவே ஒருமுறை சுருவில் அன்னைமேரி ஆலயத்தை தரிசித்த பேரருட்தந்தை மெலிசன் (அமதி) அவர்கள் ஆலயத்தின் மையப்பகுதியில் திருச்சொரூபமொன்றை நிறுவத்தக்க மாடக்குழிப்பகுதி (Niche) வெற்றிடமாக இருப்பதை உணர்ந்து வரலாற்றுச் சிறப்பு மிக்க இத்திருச்சொரூபத்தை இவ்வாலயத்திற்கு வழங்கி வைத்தார். காலகதியில் இச்சொரூபத்தின் பெருமைகளை அறிந்த அருட்பணி து.கொலின்ஸ் (அமதி) அவர்கள் பேரருட்தந்தை ஹென்றி யூலன் ஆண்டகையவர்களின் பணியாளுகைக்காலத்தில் அதனை மீளவும் பெற்றுக்கொண்டு இச்சொரூபத்திற்கு பதிலாக புதிதாக ஓர் சொரூபத்தை வழங்குவதாக உறுதியளித்த போதும் மக்கள் அதனை ஏற்றுக்கொள்ள மறுத்து தமது எதிர்ப்பை வெளியிட்டதன் பேரில் அன்னை அவ்வாலயத்திலேயே குடிகொண்டு குறைதீர்த்து வருகிறாள்[19].

**முடிவுரை**

மண்டைதீவு முதல் நெடுந்தீவு வரையான தீவகப்பிரதேசத்தை உள்ளடக்கிய பங்குகளை தொழில்நுட்ப வசதிகளுடன் போக்குவரத்துச் சேவைகள் மேம்பட்ட இன்றைய நாட்களிலேயே வழிநடத்துவது சவால்மிக்கவொன்றாக விளங்குகின்ற போதும் போக்குவரத்து வசதியீனங்கள் நிலவிய காலத்திலே படகுகள், மாட்டுவண்டில்கள், சிலசமயங்களில் கால்நடையாகவேனும் சென்று நற்செய்தியைப்பறைசாற்றி விசுவாசவித்துக்களை விதைத்த அருட்பணியாளர்களின் சேவை அளப்பெரியது. வன்மனத்தோரான மக்களை நல்வழிப்படுத்துவதும் மூடநம்பிக்கைகளில் மூழ்கியோரை அறிவுபெறச்செய்வதும் அவ்வளவு இலகுவான காரியமல்ல. சாதிப்பிணக்குகள் தலைவிரித்தாடிய காலங்களில் அவற்றை வெற்றிகொள்ள அரும்பாடுபட்டனர். பலவேளைகளில் எளிய

உணவுகளை உண்டு தமது அன்றாட வாழ்க்கையை நடத்தினர். எனினும் தமது அயராத உழைப்பால் மக்களைக்கிறிஸ்துவுக்குள் அழைத்து வந்த உண்மைப்பணியாளர்கள் தீவக மண்ணுக்கு ஆற்றிய மகத்தான பணிகளை நினைந்து மனதால் நன்றி கூறுகின்றோம்.

**பிற்குறிப்புகள்**


[1] Jesuthasan.P, Gleanings from the oblates mission field in Ceylon p129-130

[2] Jesuthasan.P, Gleanings from the oblates mission field in Ceylon p129-130

[3] மங்களராஜா.S.V.B, யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப்பார்வை பின்னணி, தோற்றம், வளர்ச்சி, பாதுகாவலன் 13.01.2019,ப18.

[4] Jesuthsan.P,Our tribute Volume-I,Published by The oblate study club oblate scholasticate Ampitiya, Sri Lanka-2001,p110

[5] Jesuthsan.P,Our tribute Volume-I,Published by The oblate study club oblate scholasticate Ampitiya, Sri Lanka-2001,p111

[6] Jesuthsan.P,Our tribute Volume-I,Published by The oblate study club oblate scholasticate Ampitiya, Sri Lanka-2001,p113

[7] Gnana Prakasar.S,XXV Years'Catholic Progress,st.Josheph's catholic press Jaffna, 2nd prient 1999,p186

[8] Jesuthsan.P,Our tribute Volume-II Part-I,p1-2

[9] செல்வராசா.ஞா.ம, சின்னமடு செபமாலை மாதாவின் ஆலய வரலாறு,2ஆம் பதிப்பு 1994,ப10-12

[10] Gnana Prakasar.S,XXV Years'Catholic Progress,st.Josheph's catholic press Jaffna, 2nd prient 1999,p193,194

[11] Gnana Prakasar.S,XXV Years'Catholic Progress,st.Josheph's catholic press Jaffna, 2nd prient 1999,p534

[12] அருட்பணி தொம்மையப்பு இயேசுதாசன், அல்லைப்பிட்டி மோசஸ்சும் (Moses) பாலைதீவு புனித அந்தோனியாரும், பாதுகாவலன் 24.03.2019

[13] Jesuthsan.P,Our tribute 1999-2009,p127

[14] பிரான்சிஸ்.பி, நேர்காணல்,அல்லைப்பிட்டி,09.01.2025

[15] கஸ்பார்.வி, நேர்காணல், மண்டைதீவு, 03.12.2025

[16] அன்னபூரணம்,சி, நேர்காணல், அல்லைப்பிட்டி, 23.12.2025

[17] Jesuthsan.P,Our tribute 1999-2009,p130

[18] Jesuthsan.P,Our tribute p150-152

[19] Gnana prakasar.S, XXV Years'Catholic Progress,st.Josheph's catholic press Jaffna, 2nd prient 1999,p183,184